செப்டம்பர் 20

## புனித யுஸ்தாஸ்

உரோமையில் பிரபு ஒருவர் இருந்தார். அவரது பெயர் ப்ளாசிதுஸ், தாசியானா என்பது அவருடைய மனைவியின் பெயர். இருவரும் கிறிஸ்தவ மறையில் சேர்ந்தார்கள். சேர்நததும் யுஸ்தாஸ், தொயொப்பிஸ்டா என்னும் பெயர்களைக் கொண்டார்கள். யுஸ்தாஸ் தம் உடைமைகளையெல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்தார். இவர் உரோமை பேரரசின் இராணுவத்தில் சேர்ந்து அதில் அதிகாரிகள் இருந்தார். இவரும் இவருடைய மனைவியும் இரு ஆண் மக்களும் வேதத்திற்காகக் கொல்லப்பட்டார்கள். இவரது மகிமைக்காக கட்டப்பட்ட பழமை வாய்ந்த ஆலயம் ஒன்று இன்றும் உரோமையில் உள்ளது. அந்தக் காலத்தில் உடைமைகளை ஏழைகளுக்கு வழங்குவது அத்தனை அபூர்வமானது அல்ல. ஏனெனில் அவர்கள் எந்த நேரத்திலும் கொல்லப்படலாம். வேதசாட்சி முடி, என்றும் அவர்கள் கண் முன் நின்றது. அவர்கள் பரகதியில் வாழ்ந்தாற் போல் வாழ்ந்து வந்தார்கள்.

**சிந்தனை:**

இப்புனிதர் புதிதாக வேதத்தில் சேர்ந்திருந்த போதிலும், கடவுள் மீது நம்பிக்கை வைத்து தம் உடைமைகளை எல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்தார். இவரைக் கைவிடவில்லை.

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் ஏழைகளிடமாய் உம்மைக் காணும் வரம் தாரும்.